# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

## நிர்வாகக் குழுத் தெரிவு 2023 - 2024

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க யாப்பின் 4(உ) ஆம் பிரிவிற்கமைய 2023 - 2024 நிர்வாகக் குழுவிற்கான தெரிவு இந்த வருடம் நடைபெறவுள்ளது. கீழே விபரிக்கப்படும் பதவிகளுக்கான நியமனப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

**பதவிகள்**

| | | |
|---|---|---|
| i) | தலைவர் | 01 |
| ii) | துணைத்தலைவர்கள் | 05 |
| iii) | செயலாளர் | 01 |
| iv) | துணைசெயலாளர் | 01 |
| v) | பொருளார் | 01 |
| vi) | துணைப்பொருளாளர் | 01 |
| vii) | பத்திராதிபர் | 01 |
| viii) | செயற்குழு உறுப்பினர்கள் | 18 |

(யாப்பு விதிமுறைக்கமைய கடந்த (2022 - 2023) செயற்குழுவின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் செயற்குழு உறுப்பினராக தெரிவு செய்யப்படின் மேலதிகமாக 15 பேர் தெரிவு செய்யப்படுவர்.)

**தேர்தல் விதிமுறைகள்.**

1. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்க உறுப்பினர் போட்டியிடுவதற்கு நியமனப்பத்திரம் தாக்கல் செய்யலாம். போட்டியிடும் ஒருவர் i–vii வரையான பதவிகளில் ஒன்றிக்கும், செயற்குழு உறுப்பினருக்கும் மாத்திரமே விண்ணப்பிக்கலாம். i–vii வரையான பதவிகளில் ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளுக்கு ஒருவர் விண்ணப்பிக்க முடியாது. அவ்வாறு விண்ணப்பிப்பின் அவருடைய விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். ஒருவர் i–vii வரையான பதவிகளில் ஒன்றுக்கும் செயற்குழு உறுப்பினருக்கும் விண்ணப்பிக்க விரும்பின் தனித்தனி நியமனப்பத்திரங்களை பூர்த்தி செய்து தனித்தனி கடித உறையிலிட்டு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்கள் 04.01.2023 ஆம் திகதி முதல் கோரப்படுகின்றன. **விண்ணப்ப முடிவு திகதி 20.01.2023 மாலை 1.30 மணிக்கு முன்பதாக சமர்ப்பிக்கப்படவேண்டும்**

2. செயற்குழு உறுப்பினர்களுக்கான தெரிவும் பொதுக்கூட்டத்திற்கு முன்னர் வேட்பு மனு கோரப்பட்டு பொதுக்குழு கூட்டத்தில் தேர்தல் மூலம் நடைபெறும். செயற்குழு உறுப்பினர் தேர்வுக்கு முன்னைய செயற்குழுவின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரிடமிருந்து வேட்பு மனு கிடைக்குமிடத்து அவர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப்படுவர். எஞ்சிய இடங்களுக்கு தேர்தல் இடம்பெறும் (யாப்பு விதி 6(ஏ)).

3. மேற்குறிப்பிட்ட பதவிகளுக்காக போட்டியிட எவரும் இல்லாதவிடத்து (பதவிக்கான விண்ணப்பபடிவங்கள் கிடைக்கப்பெறாதவிடத்து அல்லது நிராகரிக்கப்படுமிடத்து) அந்த பதவிக்கான தேர்வு பொதுக்கூட்டத்தில் சபையினால் தெரிவு செய்யப்படும்.

4. குறித்த பதவிக்காக ஒருவர் மட்டுமே போட்டியிடும் வாய்ப்பு ஏற்படின் அவர் ஏகமனதாக தெரிவு செய்யப்படுவர். (அப்பதவிக்கு வாக்கெடுப்பு நடைபெறாது.)

5. முற்றாக பூர்த்தி செய்யப்படாத, சரியாக முகவரியிடப்படாத மற்றும் குறித்த தினத்திற்கு பின்னதாக கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. சுயமாகவோ அல்லது வேறு பழைய மாணவர் சங்க உறுப்பினர்களினது முன் மொழிவின் மூலமாகவோ நியமனப்பத்திரம் தாக்கல் செய்யலாம். வேறு பழைய மாணவர் சங்க உறுப்பினர்களினது முன்மொழிவின் மூலமாக நியமனப்பத்திரம் தாக்கல் செய்வோர் பதவிக்கு விண்ணப்பிப்பவரின் ஒப்புதலைப் பெறுதல் அவசியம்.

7. விண்ணப்பங்கள் தேர்தல் குழுவால் பரிசீலிக்கப்பட்டு விண்ணப்பத்தில் குறிப்பிட்ட ஏதாவதொரு தொடர்பாடல் முறை மூலம் உறுதி செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பாக தேர்தல் குழுவால் 24.01.2023 ஆம் திகதி விண்ணப்பித்தவர்களிற்கு அறிவிக்கப்படும்.

8. நியமனப்பத்திரங்களை விலக்கிக் கொள்வதற்கான இறுதித்திகதி 27.01.2023 ஆம் திகதி பி.ப 1.30 மணிக்கு முன்னர் ஆகும். நியமனப்பத்திரங்களை விலக்கிக்கொள்ளலானது எழுத்து மூலமாக, பதவிக்கு நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டவரினால் விலக்கிக்கொள்ளப்படல் வேண்டும்.

9. தேர்தல் குழுவால் இறுதி செய்யப்பட்ட வேட்பாளர்களினது விபரங்கள் 31.01.2023 பழைய மாணவர் சங்க இணைய தளம் (www.jhcobajaffna.com) மூலமும் பழைய மாணவர் சங்க விளம்பர பலகை மூலமும் காட்சிப்படுத்தப்படும்.

10. வாக்கெடுப்பு வருடாந்த பொதுக்கூட்ட தினத்தன்று இடம்பெறும். (பொதுக்கூட்ட அறிவித்தல் வழமைபோல் பழைய மாணவர் சங்க செயலாளரினால் அறிவிக்கப்படும்.)

11. நியமனப்பத்திரம் பூர்த்தி செய்யும் போது பின்வரும் நிபந்தனைகளைக் கருத்தில் கொள்க.
    - நடப்பு செயற்குழு (2022-2023) பதவிக்காலத்தில் செயற்குழு உறுப்பினராக உள்ள ஒருவர் நடைபெற்ற மொத்த செயற்குழு கூட்டத்தில் 50% ஆன கூட்டங்களுக்கு சமுமளித்திருத்தல் அவசியம். (யாப்பு விதி 6(ஊ)).
    - தலைவர், செயலாளர், பொருளாளர் பதவி வகித்த ஒரு உறுப்பினர் தொடர்ந்து அந்த பதவிகளுக்கு அடுத்தடுத்து 2 தடவைகளுக்கு மேலாக தெரிவு செய்யப்பட முடியாது. (மாறாக விண்ணப்பிக்கவும் முடியாது). (யாப்பு விதி 4(ஈ)).
    - தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய பதவி நிலைகளுக்கு விண்ணப்பிப்பவர் செயற்குழுவில் கடைசி 5 வருடங்களில் குறைந்தது 1 வருடம் பணியாற்றியவராக இருக்கவேண்டும். (யாப்பு விதி 4(ஊ)).
    - i–vii வரையான பதவிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு ஒருவர் விண்ணப்பிப்பின் அவரது சகல விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

12. தேர்தல் குழுவின் முடிவே இறுதியானது.

முற்றாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை கடித உறையிலிட்டு ஒட்டி

> "தலைவர்
> தேர்தல் குழு,
> யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்,
> யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி."

என முகவரியிட்டு இடது பக்க மேல் மூலையில் "நிர்வாக குழுத் தெரிவு 2023-2024" விண்ணப்பத்திற்கான பதவியையும் குறிப்பிட வேண்டும். விண்ணப்பங்களை 20.01.2023 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலமாக சமர்ப்பிக்கலாம்.

.......................................
தலைவர்,
தேர்தல் குழு.

.......................................
செயலாளர்,
தேர்தல் குழு.

திகதி: 04.01.2023

தொடர்புகளுக்கு:
தேர்தல் குழு உறுப்பினர்கள்

திரு. சு.முரளிதரன் - செயலாளர் (077 6539952)
சட்டத்தரணி திரு. வி. திருக்குமரன் (077 9679597)
திரு. எஸ். அனுராஜ் (077 7769751)
திரு. எஸ். சிவானந்தன் (077 2642319)
எந்திரி திரு. எஸ். ஜெகதீஸ்வரன் (077 3928634)